சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம் – கல்வி – விடுதிகள் – 2011–2012–ம் ஆண்டிற்கான பகுதி II திட்டம் – 40 பழங்குடியினர் நல மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு படுக்கை வசதி செய்து கொடுத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை

அரசாணை (நிலை) எண். 92

நாள்: 24.10.2011
திருவள்ளுர் ஆண்டு 2042 ஐப்பசி 7
படிக்க.

பழங்குடியினர் நல இயக்குநரின் கடித எண். பமே/ஆ1/3642/ 2011, நாள்: 22.09.2011.

---

2011–2012–ம் ஆண்டில் 40 பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 2043 மாணவர்/மாணவியர்களுக்கு அவர் தங்களின் படிப்பில் நாட்டம் செலுத்துவதை ஊக்கிவிக்கவும் பள்ளிகளில் இருந்து மாணவர்கள் இடைநிற்றல் விழுக்காட்டை குறைக்கும் நோக்குடனும் தங்கும் இடங்களை படிப்பதற்கு ஏற்ற நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி கொடுக்கும் வகையில் இம்மாணவர்/மாணவியர்களுக்கு குறைந்த அளவுள்ள படுக்கை (அடுக்கு கட்டில்) தலையணை மற்றும் இரண்டு படுக்கை விரிப்புகள் போன்ற வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கலாம் எனவும் அதற்காக ஏற்படும் செலவினம் ரூ.74.90இலட்சம் ஆகும் எனத் தெரிவித்து இத்திட்டத்தை 2011–2012ம் ஆண்டில் பகுதி II திட்டத்தில் பரிசீலனை செய்யுமாறும் இயக்குநர், பழங்குடியினர் நலன் அவர்கள் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேலும், பழங்குடியினர் நல இயக்குநர் அவர்கள் தனது 22.09.2011 நாளிட்ட கடிதத்தில் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 40 விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 2043 மாணவர்/மாணவியர்களுக்கு மூன்று மாணவர்கள் படுக்கக்கூடிய அடுக்கு கட்டில் ஒன்று, மூன்று மெத்தைகள், மூன்று தலையணைகள் மற்றும் ஆறு படுக்கை விரிப்பு அடங்கிய ஒரு அலகு (one set) என்ற வகையில் 2043 மாணவர்/மாணவியர்களுக்கு 681 (set) அலகு வாங்க வேண்டி உள்ளது எனவும், ஒரு அலகின் (set) விலை ரூ.11,000/– (8640+2357 Vat வரி உட்பட) ஆகும் என தெரிவித்து அந்த வகையில் 2043 மாணவ / மாணவியர்களுக்கு 681 செட் அடுக்கு கட்டில், மெத்தை, தலையணை மற்றும் படுக்கை விரிப்புகள் வாங்க மொத்தம் ரூ.74.90 இலட்சம் செலவு ஏற்படும் எனவும், தெரிவித்து விபரங்கள் அனுப்பியுள்ளார். அவை வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| 1 | மூன்று அடுக்கு இரும்புக் கட்டில் (Three Tire Steel Cot) Size 6.1/2 x 2.3/4 x 6 ½ 18 gauge 1.1/2 Angle 6 ½ Height 2 ¾ Breadth 6 ½ Length Total Weight 85 Kg. | Rs.8229/- each set (+5%Vat Rs.411/-) | = 8,640/- |
| 2 | மெத்தை தலையணை மற்றும் படுக்கை விரிப்பு (Cotton Bed, Two Bed Sheet, one Pillow. 3 in one set) | Rs.2245/- each set (+5%Vat Rs.112/-) | = 2,357/- |
| | | | 10,997/- |

மொத்த மாணவ, மாணவியர்கள் = 2043
மூன்று அடுக்கு கட்டில் எண்ணிக்கை = 681
மூன்று அடுக்கு கட்டில் ஒன்று,
மூன்று மெத்தை + மூன்று தலையணை + = 11,000 x 681=ரூ.74,91,000/–
ஆறு படுக்கை விரிப்பு

3. மேற்கண்ட இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள 40 பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கி கல்விப் பயிலும் 2043 மாணவ/மாணவியர்களுக்கு 3 மாணவர்/மாணவியர் படுக்கக் கூடிய அடுக்கு கட்டில், மூன்று மெத்தைகள், மூன்று தலையணைகள் மற்றும் 6 படுக்கை விரிப்பு அடங்கிய ஒரு செட் கட்டில் விலை ரூ.11,000/– (8640+2357 Vat வரி உட்பட) வீதம் 2043 மாணவ/மாணவியர்களுக்கு 681 செட் கட்டில் வாங்கி வழங்க ரூ.74,90,000/– (ரூபாய் எழுபத்து நான்கு இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்) கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

i) பகுதி II திட்டங்களுக்கு என ஒப்பளித்தத் தொகையினை மேற்கண்ட திட்டப் பணிகளுக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும்.
ii) பகுதி II திட்டத்தின் செலவினம் போக மீதத் தொகை இருப்பின் அத்தொகையை அரசு கணக்கில் உடனடியாக சரண் செய்தல் வேண்டும்.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–02–பழங்குடியினர் நலன்–277–கல்வி–பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டம் பணிகள் II – மாநிலத் திட்டம்–JC மாணவர் இல்லம் இணைந்த பழங்குடியினர் பள்ளிகளை தொடங்குதலும் பராமரித்தலும்

05 05 அறைகலன் – ரூ.50.00 இலட்சம்
(கு.தொ.கு 2225 02 277 JC 0550)

24 00 பொருள்களும் வழங்கலும் – ரூ. 24.90 இலட்சம்
(கு.தொ.கு 2225 02 277 JC 2405)

5. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை இயக்குநர் பழங்குடியினர் நலம் அவர்கள் பெற்று 40 பழங்குடியினர் விடுதிகளுக்கு நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி படுக்கை சாதனங்கள் வாங்க சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்களுக்கு இத்தொகையைப் பகிர்ந்தளிக்க அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் இவ்வாணை வெளியிடப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்குள் இப்பணி நிறைவேற்றப்பட்டு படுக்கை வசதி வழங்கப்பட்ட தேதியும் விடுதிகளின் பெயர்களையும் அரசுக்கு உடன் தெரிவிக்குமாறு இயக்குநர் பழங்குடியினர் நலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் பட்டியலில் குறிப்பிட்டுள்ள மேற்படி 40 விடுதிகளில் மாற்றம் ஏதும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமாறு இயக்குநர் பழங்குடியினர் நலம் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5 . இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.54039/ஆதி(ம)பந துறை நாள் 21.10.2011 ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. சு. ஜீவரத்தினம்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
ஆணையர், ஆதிதிராவிடர் நலம் , சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
மாநில கணக்காயர், சென்னை 6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
நகல்:
நிதித்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

25.10.11
பிரிவு அலுவலர்.